ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# சிலப்பதிகாரம் காட்டும் வரிப்பாட்டு

முனைவர் ஐ.க.விஜி
உதவிப் பேராசிரியர்,ஸ்ரீ ஐயப்பா மகளிர் கல்லூரி.
மின்னஞ்சல்: vijigirish48@gmail.com

**ABSTRACT**

Silappathikaram has become a legend in Tamil Nadu stories. The line that gives it a solo and ear is a weaving song sung in a beach garden. It comes as a line drawn by the deity and a line drawn by the people. The leader in the Sangam literature is the claim of the playwright to the leader. In this case, the purpose of this article is to illustrate the point of view of taxonomy.

Key words : Varipattu, Varipattin Sirappu, Agapattu, Kanalvari, Vetuvavari

**ஆய்வுச்சுருக்கம்**

தமிழ் நாட்டுக் கதைகளில் பழங்காப்பியமாக விளங்கியது சிலப்பதிகாரம். இதனை தனிச் செய்யுள் என்றும் காதை என்றும் வழங்குவர் வரிப்பாட்டு என்பது கடற்கரை சோலையில் பாடிய நெய்தற்பாட்டு ஆகும். இது தெய்வம் சுட்டிய வரிப்பாட்டாகவும், மக்களை பழிச்சிய வரிப்பாட்டாகவும் வரும். சங்க இலக்கியங்களில் அகப்பொருளில் வரும் தலைவன் தலைவி முதலான நாடக பாத்திரங்களின் கூற்றுக்களே ஆகும். இத்தகைய நிலையில் சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் வரிப்பாட்டின் கருத்துகளை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாக காணப்படுகின்றன.

தரவுச் சொற்கள் : வரிப்பாட்டு, வரிப்பாட்டின் சிறப்பு, அகப்பாட்டு, கானல்வரி, வேட்டுவவரி.

**முன்னுரை**

தமிழ்நாட்டுக் கதைகளில் பழங்காப்பியமாக ஆதி காவியமாக இன்றுள்ள முதல் காவியமாக விளங்குவது சிலப்பதிகாரம். சங்க இலக்கிய நோக்கில் சிலப்பதிகாரம் என்பது முப்பது தனிச் செய்யுளே ஆகும். இந்த தனிச் செய்யுளே காதை என்றும் வழங்குவர். தமிழில் தோன்றிய முதல் காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். கதையில் வரும் நிகழ்ச்சிகளுக்கு எல்லாம் சிலம்பே காரணமாக இருப்பதால் இந்நூல் சிலப்பதிகாரம் என பெயர் பெற்றது. இந்த சிலப்பதிகாரத்திற்கு ஒரு சிறப்பு உண்டு. அதனை அறிய முயன்றால் அதன் அழகினை உணரமுடியாது. இத்தகைய நிலையிலே சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் வரிப்பாட்டின் கருத்துகளை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வரிப்பாட்டு**

கானல் வரி என்பது சிலப்பதிகாரத்தின் ஒரு பகுதி. கடற்கரைச் சோலையில் பாடிய நெய்தல் பாடல். இதனை காதற்பாணி என ஆசிரியர் பிற இடங்களில் கூறுவர். பாணி என்பது வரி.

இத்தகைய வரிப்பாட்டு தெய்வம் சுட்டிய வரிப்பாட்டாகவும், மக்களை பழிச்சிய வரிப்பாட்டாகவும் வரும். கானல் வரி மக்களை பழிப்பதே ஆகும். இப்பாட்டு கூடையென்றும், வாராமென்றும் இரு வகைப்படும்.

'எழு வகை நிலத்திலும் எய்திய வரி' என்று ஊர் காண் காதையில் இளங்கோவடிகள் பாடுகிறார். இங்கே ஏழு வகை வரிப்பாடல்களை குறிப்பிடுகின்றார். அவை, 1. ஆற்றுவரி, 2. சார்த்துவரி, 3. திணைநிலைவரி, 4.மயங்கு திணை நிலை வரி, 5. முகமுடை வரி, 6. முகமில் வரி, 7. படைப்பு வரி என்பவையாகும்.

**வரிபாட்டின் சிறப்பு**

சிலப்பதிகாரத்தில் வரிப்பாடல்கள் நாடக பாத்திரங்களின் பேச்சுக்களாகவே அமைகின்றன. கதையை விளக்க ஒரு சில பகுதிகள் உரைபாட்டு கட்டுரையாகவே வருகின்றன. வேட்டுவ வரியில் வரிப்பாட்டுக்கு முந்திய பகுதி செய்யுளாகவே அமைகின்றன.

வரி என்பது பல வரிக் கூத்துக்கும் பெயர் என்பாரும் ஊர் என அடியார்க்கு நல்லார் கூறுவர் அவற்றின் பெயர்களை ஒரு சூத்திரம் கொண்டு கூறுகிறார். அவை நாட்டுப் பாடலும் கூத்துமாக அமைவதைக் காணலாம். பின்பு வேட்டுவ வரி என்றும், ஊர் சூழ் வரி என்றும் வருவதைக் காணலாம். மேலும் குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை போன்றவற்றில் வரும் பாடல்கள் வரி பாடல்களே எனலாம். ஆய்ச்சியர் குரவையில் வரி வாழ்த்து என ஒரு பாடல் வருகிறது.

"சிந்துப் பிழுக்கையுடன் சந்தி ஒர் முல்லை
கொந்தி கவுசி குடப்பிழுக்கை – கந்தன் பாட்டு
ஆலங் காட்டாண்டி பரு மணல் நெல்லிச்சி"

**அகப்பாட்டு**

அகப்பாட்டுகள் அனைவருக்கும் பொதுவான குறிக்கோள் வாழ்க்கையினையே பாடுவதாக அமையும். அதாவது குறிப்பிட்ட ஆணைப் பற்றியோ, பெண்ணைப் பற்றியோ அவை பாடுவதில்லை. அவை சங்க கால இலக்கியங்களின் அகப்பொருளில் வரும் தலைவன், தலைவி முதலான நாடக பாத்திரங்களின் கூற்றுகளே ஆகும். அது யார் கூற்று ? எந்த இடத்தில் பேசப்பட்டது ? என்ன மெய்பாடு? ஏதேனும் குறிப்பு உண்டா? முதலியவற்றை அறிய முயன்றால் அவற்றின் உட்கருத்தை அறிய முடியாது. சிலப்பதிகாரத்தில் ஒரே பேச்சே பல பொருளுக்கு ஒத்து வருவதைக் காண்கிறோம். அதாவது மாதவி எழுதிய இரண்டாவது கடிதத்தில் ஒரு சொல்லும் மாற்றாது தன் பெற்றோர்களுக்குத் தான் எழுதும் கடிதமாகவே கோவலன் அனுப்பிவிடுகிறான்.

**கானல் வரி**

கானல் வரியும் ஒரு அகப்பாடலே ஆகும். கோவலன் தலைவன் கூற்றாக பாடுகிறான். அதில் மாதவி கோவலன் குரலை கேட்பது அகப்பாட்டு மரபுக்கு ஒவ்வாததேயாகும். அவ்வாறு மாதவியும் அகப்பாடல் தலைவி பாடுவன போல பாடும் பாடல்களிலும் கோவலன் மாதவியின் குரலை கேட்பது அகப்பாட்டு மரபுக்கு மாறுபட்டதே ஆகும். இவ்வாறு பாடுவது பழைய மரபுக்கு ஒத்தாகாது. இந்த வகையில் பழைய மரபு சிறிது சிறிதாக மறைந்து விடுகிறது. ஆசிரியர் நாடக பாத்திரமாக பேச வந்தாலும் அவனுடைய அனுபவம், உணர்வு, குறிக்கோள் போன்றவை

அகப்பாட்டின் வடிவிலே வருகிறது. ஆகவே பாட்டில் நாடக பாத்திரங்களின் உள்ளத்தை அன்றி ஆசிரியரின் உள்ளத்தை அறிய முயல்வது இயல்பாகி விடுகிறது. இந்த கானல் வரி பாடலில் இளங்கோவடிகள் பின் வருமாறு கூறுவதைக் காணலாம். அதாவது கடற்கரையில் தலைவனை பிரிந்த தலைவி ஒருத்தி ஒரு மங்கும் மாலைப் பொழுதில் அங்குள்ள உப்பங்கழிகளில் கூம்பியுள்ள கழு நீர் மொட்டுக்களை நோக்கி அன்னங்கள் உலவும் கடற்கரை கால்வாயில் கூம்பி உள்ள மொட்டுக்களே எம்மை மறந்த எம் தலைவரை மறக்க முடியாமல் துன்பம் மிகுந்த இடம் மாலைப்பொழுதில் புலம்பும் என் கண்களைப் போல் துன்பம் மிகுதியால் உறங்குகின்ற தேன் நிறைந்த நெய்தல் மலர் மொட்டுக்களே உங்கள் உறக்கத்தில் நீங்கள் கனவு காண்பீர்கள் அல்லவா ? அக்கனவிலும் என்னைக் கொடுமைச் செய்கின்ற எம் தலைவர் வரக் கண்டாயா ? என மாலை நேரத்தில் கூம்பி இருக்கின்ற கழுநீர் மலர்களை உறங்குவதாக தன்னுடைய நிலையோடு ஒப்பிட்டு தற்குறிப்பேற்ற அணியில் தலைவி கூறுவதாக கூறியுள்ளார்.

**வேட்டுவ வரி**

வேட்டுவர்கள் கொற்றவையை வழிபாடு செய்து வாழ்த்திய வரிப்பாடல்களே வேட்டுவ வரியாகும். மேலும் கொற்றவையின் புகழ்பாடும் மறவர்கள் கூத்து ஆடி பாடுவதால் இதனை வரிக்கூத்தும் என்றும் அழைப்பர். சிலப்பதிகாரத்தில் கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் ஆகிய மூவரும் இளைப்பாற்றியிருந்த போது அந்த பாலைப்பகுதியில் குரவமரம்,

கோங்கமும், வேங்கையும், விரவிய பூஞ்சோலையில் அங்குள்ள எயினர் மேல் சாமி புகுந்து அவர்கள் அத்தெய்வத்தை புகழ்ந்து பாடுவர். இவ்வாறு புகழ்ந்த பாடும் போது அவர்கள் காணிக்கையாக கொற்றவைக்கு கூழ் சமைத்து வழிபடுவர்.

**நிறைவுரை**

வாழ்க்கை என்ற கடலில் செல்லும் கலங்கள் தான் மக்கள் அம்மக்களுக்கு சிறந்த கலங்கரை விளக்கமாக இருப்பது இலக்கியங்கள். இலக்கியங்களின் பயன் இன்பமும் சுவையும் மட்டும் அளிப்பதல்ல. மக்களை நெறிப்படுத்தி அன்பு வழிக்காட்டும் வழித் துணைவன், அன்றும் இன்றும் என்றும் இலக்கியங்கள் தான் இந்த இலக்கியம் வழி தோன்றிய சிலப்பதிகாரம் ஒரு சமுதாயத்தின் அடையாளம். ஒரு புரட்சிக்காப்பியம், என்றெல்லாம் அழைக்கப்படுவதால் இந்த காப்பியத்தில் மேலும் அணி சேர்க்கிறது எனலாம்.

**பார்வை நூல்கள்**

1. மீனாட்சிசுந்தரனார், தெ.பொ., குடிமக்கள் காப்பியம், பாவை பப்ளிகேஷன், சென்னை.
2. சுரேஷ், சி.ரா., இராஜேஷ், ப., தமிழிலக்கியங்களில் பண்பாட்டுக்கூறுகளும் வாழ்வியல் நெறிமுறைகளும், காவ்யா பதிப்பகம், சென்னை.
3. ஐம்பெருங்காப்பியங்களில் அறம், தமிழ் ஐயா வெளியீட்டகம், திருவையாறு.